# தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-600 008

தொலைபேசி : 044-28191890, 28190580


## பொது ஏலம் மற்றும் டெண்டர் நோட்டீஸ்

டிசம்பர் 2008- ஆம் வருடத்திய Honda City Car TN-01AH-5097 மற்றும் செப்டெம்பர் 2009-ஆம் வருடத்திய Mahindra and Mahindra Bolero Jeep TN-01AJ-8127 ஆகிய இரண்டு வாகனங்கள் "உள்ளது உள்ள நிலையில்" விற்பனைக்காக உள்ளது. இதற்கான மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் 05.08.2022 பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. டெண்டர் படிவங்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் அலுவலக வேலை நாட்களில் 27.07.2022 முதல் காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிக்குள் ரூ.118.00 (வரி உட்பட) ரொக்கமாகவோ அல்லது தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழகம் என்ற பெயரிடப்பட்ட கேட்பு வரைவு காசோலையாகவோ கொடுத்து பெற்றுக்கொள்ளலாம். 05.08.2022 பிற்பகல் 3.30 மணிக்கு பொது ஏலம் நடைபெறும். பெறப்பட்ட டெண்டர்கள் 05.08.2022 அன்று மாலை பொது ஏலம் முடிந்தவுடன் பிரிக்கப்படும். ஊர்தியை பார்வையிட விருப்பமுள்ளவர்கள் அலுவலக நாட்களில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.45 மணிக்குள் மேற்கண்ட விலாசத்தில் பார்வையிடலாம். டெண்டர் படிவங்கள் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தால் படிவக்கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

பொது மேலாளர் (பணிகள்) (பொ)

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

# தமிழ் நாடு மருத்துவப் பணிகள் கழகம்

417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-600 008

**" உள்ளது உள்ள நிலையில் "**

பொது ஏலம் மற்றும் டெண்டர் மூலம் வாகன விற்பனை விதிமுறைகள்

வாகனப் பதிவு எண்: TN-01AJ-8127

1. ரூ.118/- (வரிகள் உட்பட) பணமாகவோ அல்லது கேட்பு வரைவோலையாகவோ செலுத்தி டெண்டர் படிவத்தினை அலுவலகத்தின் வேலைநாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணிக்குள் பெற்றுக் கொள்ளலாம். கேட்பு வரைவோலை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், சென்னை என்ற பெயரில் எடுத்திருக்க வேண்டும். இத்தொகை திருப்பித்தரத்தக்கதல்ல.

2. ஒவ்வொரு டெண்டர்தாரரும் மேற்படி வாகனத்திற்கான பிணை வைப்புத்தொகையாக ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) ஒவ்வொரு வாகனத்திற்கும் கேட்பு வரைவோலையாக டெண்டர் படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

3. மேற்படி வாகனம் எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் ஏலம் விடப்படும். மூடித் திரையிடப்பட்ட டெண்டர்கள் 05.08.2022 அன்று மாலை 3.00 மணிக்குள் வந்து சேரவேண்டும்.

4. 05.08.2022 அன்று மாலை 11.30 மணிக்கு பொது ஏலம் நடத்தப்படும். குறித்த காலத்திற்குள் பெறப்பட்ட டெண்டர்கள் ஏலம் முடிந்தவுடன் டெண்டர்தாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

5. பொது ஏலத்தில் பங்கு பெறும் ஒவ்வொரு நபரிடமிருந்தும் பிணை வைப்புத் தொகையாக ரூ.5000/- பெறப்படும். இத்தொகை ரொக்கமாகவோ அல்லது மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழகம் என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை மூலமாகவோ செலுத்தலாம். ஏலம் குறிப்பிட்ட நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்பே பிணைவைப்புத் தொகை செலுத்தியிருக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் டெண்டர் படிவம் கொடுக்க தவறியவர்களும், பிணைவைப்புத் தொகை செலுத்தாதவர்களும் ஏலத்தில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். பொது ஏலம் முடிந்தவுடன், அதிகபட்சமாக ஏலத்தில் அல்லது மூடி முத்திரையிடப்பட்ட டெண்டரில் கேட்ட நபர் செலுத்திய பிணை வைப்புத் தொகையை தவிர மற்றவர்கள் செலுத்திய தொகை

திருப்பியளிக்கப்படும். டெண்டர்தாரர்களின் முன்வைப்புத் தொகை காசோலையாக அல்லது ரொக்கமாக ஏலம் முடிந்த அன்று அல்லது இரண்டு நாட்களில் திருப்பித்தரப்படும்.

6. ஏலத்தாரர்/டெண்டர்தாரர் விற்பனைக்குரிய வாகனத்தை முன் அனுமதி பெற்று வேலைநாட்களில் அலுவலகப் பணி நேரத்தில் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் பார்வையிடலாம். பார்வையிடும்போதோ, விற்பனையின்போதோ அல்லது எடுத்துச் செல்லும்போதோ இந்த வாகனத்தின் குறைபாடுகள் குறித்து எவ்வித முறையீடுகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7. ஏலத்திலோ/டெண்டரிலோ கோரப்படும் அதிகபட்சத் தொகையை மேலாண்மை இயக்குநர் ஏற்றுக் கொண்ட பிறகு உறுதி செய்யப்படும். அதிகபட்சத் தொகையை கேட்டதின் காரணமாகவோ விற்பனை உரிமை கொண்டாடுவதற்கு எந்த உரிமையும் கிடையாது.

8. பொது ஏலத்தில்/மூடி முத்திரையிடப்பட்ட டெண்டரில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிகபட்சத் தொகை கூறிய ஏலதாரர் கோரிய மொத்த தொகையில் 25% பணமாகவோ அல்லது கோடிட்ட கேட்பு வரைவோலையாகவோ ஏலம் நடந்த இடத்திலேயே முன்பணமாக செலுத்த வேண்டும். அப்படி செய்யத் தவறினால் அவரால் கேட்கப்பட்ட அதிகபட்சத் தொகையை ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்லாமல் பிணைவைப்புத் தொகை, முன்வைப்புத் தொகை திருப்பியளிக்கப்படமாட்டாது.

9. வெற்றி பெற்ற டெண்டர்தாரர்/ஏலதாரர் மேற்படி வாகனத்திற்கான, கழகத்திலிருந்து விற்பனை உறுதிப்படுத்தும் கடிதம் கிடைத்த தேதியிலிருந்து 3 அலுவலக வேலைநாட்களுக்குள்ளாக மீதமுள்ள விற்பனைத் தொகையுடன் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மொத்த தொகைக்கு நடைமுறையிலிருக்கும் விற்பனை வரி செலுத்திட வேண்டும்.

10. வெற்றி பெற்ற ஏலதாரர்/டெண்டர்தாரர் மீதமுள்ள தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தி, செலுத்திய தேதியிலிருந்து 7 வேலை நாட்களுக்குள் தனது சொந்த பொறுப்பு மற்றும் செலவில் வாகனத்தை எடுத்துச் செல்ல வேண்டும்.

11. கழகத்தால் உறுதி செய்யப்பட்ட தொகையை காலம் தாழ்த்தி செலுத்தும்போது செலுத்தப்பட வேண்டிய மீதித் தொகைக்கு ஆண்டிற்கு 18.5% அபராத வட்டியுடன் 15 வேலை நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். இக்காலக் கெடுவிற்கு பிறகு எவ்வித தொகையும் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும் முன்வைப்புத் தொகை / நுழைவுத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

12. அளிக்கப்பட்ட காலக் கெடுவிற்குள் மேற்படி வாகனத்தை விதிமுறைகளின்படி எடுத்து செல்லப்படாமலிருந்தால், மேலாண்மை இயக்குநர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் மூலமாக மேலும் கொடுக்கப்படும் கால அளவிற்கு எடுத்துச் செல்லப்படும் வாகனத்தின் மொத்த விற்பனை விலையின் மீது 1/2% நில வாடகையாக வசூலிக்கப்படும். அதிகரிக்கப்பட்ட காலக்கெடு முடிந்த பிறகும் வாகனம் எடுத்துச் செல்லப்படாமலிருந்தால், மேலாண்மை இயக்குநர்/அங்கீகாரம் பெற்ற அதிகாரி மூலம் எடுத்துச் செல்லப்படாமலிருக்கும் வாகனத்தை மீண்டும் ஏலம் / டெண்டர் வாயிலாக விற்பனை செய்யப்படும்.

13. டெண்டர் ஷெடியூலின்படி/அறிவிக்கபட்ட வாகனம் விற்பனை உறுதி செய்வதற்கு முன்பு தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்திற்கு தேவையென்று கருதப்பட்டால் அவற்றை எவ்வித முன்னறிவிப்பும் செய்யாமல் கழகம் எடுத்துக் கொள்ளும் உரிமையுண்டு.

14. வாகனத்தின் மீதான வரி நிலுவைகள் அனைத்தும் வெற்றிபெற்ற ஏலத்தாரர்/ டெண்டர்தாரர்தான் செலுத்த வேண்டும். இக்கழகம் வரி நிலுவைகள்/அபராதம் ஆகியவற்றிற்கு பொறுப்பல்ல.

15. கோரப்பட்ட விலையை எவ்வித காரணமுமின்றி நிராகரிக்கும் உரிமை மற்றும் ஏலம்/டெண்டருக்கான விதிமுறைகளை மாற்றம் செய்வது அல்லது நீக்குவது அல்லது புது விதிமுறையை சேர்ப்பது போன்ற உரிமைகள் மேலாண்மை இயக்குநருக்கு உண்டு.

பொது மேலாளர் (பணிகள்) பொ

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

**TAMIL NADU MEDICAL SERVICES CORPORATION LIMITED**
(A Government of Tamil Nadu Undertaking)
ISO 9001-2015 CERTIFIED ORGANISATION
417, Pantheon Road, Egmore, Chennai – 600 008.
**Phone: 044-2819 1890, 2819 0259 Fax: 044-28190636**

---

## Tender Schedule and Quotation Document

TENDER-CUM-PUBLIC AUCTION TO BE HELD ON 05.08.2022

AT 3.30 P.M. AT THE ABOVE ADDRESS

Last date and time of receipt of
Filled in Tender Forms : 05.08.2022 upto 3.00 P.M.

| S. No | Vehicle No. | Make | Model | Amount Quoted in figures and words. |
|---|---|---|---|---|
| 1 | TN-01AJ-8127 | Mahindra and Mahindra Bolero Jeep | 2009 | |

DD No. & Date: DD Amount: Rs.5000/-

I have read the tender conditions and have also understood the cope and purpose of the tender condition and I will abide by the same.

Date: Signature of the Tenderer with full Address and Phone No.

---

## FOR OFFICE USE ONLY

1. Tender opened on :
2. The rate quoted for the vehicle :
3. Corrections if any :